தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

இன்றைய வேளாண் செய்திகள்

01.10.2012 A.M

| 01st Oct 20012 | நடப்பு 2012ம் காலண்டர் ஆண்டில் மிளகு உற்பத்தி 43 ஆயிரம் டன்னாக குறையும் |
|---|---|



கொச்சி:நடப்பு 2012ம் காலண்டர் ஆண்டில், நாட்டின் மிளகு உற்பத்தி, 43 ஆயிரம் டன்னாக குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2011ம் ஆண்டில், இதன் உற்பத்தி, 48 ஆயிரம் டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.சாகுபடி பரப்பளவு:உள்நாட்டில், மிளகு சாகுபடி பரப்பளவு குறைந்து வருவது, பழைய மிளகு கொடிகளை மாற்றாமல் இருப்பது, தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை மற்றும் அதிக ஊதியம் போன்றவற்றால், உள்நாட்டில், மிளகு உற்பத்தி குறைந்து வருவதாக, இத்துறையை சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார். உள்நாட்டில், மிளகு உற்பத்தியில், கேரளாவின் பங்களிப்பு, 85 சதவீத அளவிற்கு உள்ளது. இதைத்தொடர்ந்து, கர்நாடகா (11 சதவீதம்), தமிழகம் (3 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன. சர்வதேச அளவில், மிளகு உற்பத்தியில், ஒரு காலத்தில், இந்தியாவே மிகப் பெரிய நாடாக இருந்தது. ஆனால், நம் நாட்டிற்கு பிறகு, அதாவது, 1990களில், வியட்நாம் நாடு மிளகு

உற்பத்தியில் ஈடுபடத் துவங்கியது.

இன்று, சர்வதேச அளவில், மிளகு உற்பத்தியில் வியட்நாம் நாடே முதலிடத்தில் உள்ளது.

வியட்நாம்:கடந்த 2003ம் ஆண்டிற்கு முன் வரை, மிளகு உற்பத்தியில், இந்தியாவே முதலிடத்தில் இருந்தது. அதன் பிறகு, வியட்நாம் நாடு, படிப்படியாக நம் நாட்டை விஞ்சியுள்ளது.கடந்த 2010ம் ஆண்டில், சர்வதேச மிளகு உற்பத்தியில், வியட்நாமின் பங்களிப்பு, 33 சதவீதமாகவும், ஏற்றுமதி, 43 சதவீதமாகவும் அதிகரித்தது.

தற்போது, இந்நாட்டின் மிளகு உற்பத்தி, ஆண்டுக்கு, ஒரு லட்சம் டன்னாக அதிகரித்துஉள்ளது.

உலகளவில், மிளகு உற்பத்தியில், வியட்நாம், இந்தியா, இந்தோனேஷியா, பிரேசில், மலேசியா ஆகிய நாடுகளின் பங்களிப்பு, 85 சதவீத அளவிற்கு உள்ளது.

ஏற்றுமதி:உலக அளவில், மிளகிற்கான தேவை உயர்ந்து வருகிறது. கடந்த ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பாக, சர்வதேச சந்தைக்கான மிளகு ஏற்றுமதி, 1.62 லட்சம் டன்னாக இருந்தது. இது, தற்போது, 2.60 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

அதேசமயம், சர்வதேச அளவில், மிளகு உற்பத்தி, கடந்த 2001ம் ஆண்டில், 2.53 லட்சம் டன்னாக இருந்தது. இது, தற்போது, (2012) 3.20 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

சர்வதேச அளவில், மிளகு ஏற்றுமதியில், வியட்நாமிற்கு அடுத்தபடியாக, பிரேசில், இந்தோனேஷியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகள் உள்ளன.

பயன்பாடு:இந்தியாவின் மிளகு ஏற்றுமதி, கடந்த ஒரு சில ஆண்டுகளாக குறைந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம், உள்நாட்டில், இதன் பயன்பாடு அதிகமாக இருப்பது தான். கடந்த 2007ம் ஆண்டு முதல், இந்தியாவின் மிளகு ஏற்றுமதி, அளவு மற்றும் மதிப்பின் அடிப்படையில் குறைந்து வருகிறது.

கடந்த 2011-12ம் நிதியாண்டில், நாட்டின், மிளகு ஏற்றுமதி, 26,700 டன்னாக இருந்தது.

இந்நிலையில், நடப்பு 2012-13ம் நிதியாண்டில், 20 ஆயிரம் டன் மிளகு ஏற்றுமதி செய்ய, இந்திய நறுமணப் பொருட்கள் வாரியம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

உள்நாட்டில், மிளகு உற்பத்தி குறைந்துள்ள நிலையில், இதற்கான தேவை வளர்ச்சி தொடர்ந்து நிலையாக உள்ளது. இதனால், இதன் விலை உயர்ந்து வருகிறது.

கடந்த 2007ம் ஆண்டு ஜனவரியில், நடப்பு சந்தையில், ஒரு குவிண்டால் மிளகின் விலை, 10,650 ரூபாயாக இருந்தது.

இது, சென்ற ஆகஸ்ட் மாத நிலவரப்படி, 43,129 ரூபாயாக அதிகரித்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார சுணக்க நிலையால், சர்வதேச சந்தையில், இதற்கான தேவையும், விலையும் சரிவடைந்துள்ளது.

முன்னேற்றம் :இதையடுத்து, இந்தியாவிலும், இதன் விலை கடந்த ஒரு மாதமாக வீழ்ச்சி கண்டு வருகிறது.அதிகளவில், மிளகு விளையும் கேரள மாநிலத்தில், பின் தங்கிய மழைப்பொழிவால், மிளகு உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், நடப்பாண்டின், முடிவில், இதன்

உற்பத்தியும், வரத்தும் அதிகரிக்கும் என, கூறப்படுகிறது. இந்தியாவில், மிளகு அறுவடை, டிசம்பர் முதல் பிப்ரவரி வரை மேற்கொள்ளப்படுகிறது.

01st Oct 20012

## நடப்பு நிதி ஆண்டில் உர இறக்குமதி குறையும்



புதுடில்லி:காலம் தவறிய மழைப் பொழிவால், நடப்பு கரீப் பருவத்தில், நாட்டின், பல மாநிலங்களில், வேளாண் உற்பத்தி சுணக்கம் கண்டுள்ளது.
இந்நிலையில், உர விற்பனை குறைந்துள்ளதாலும், கையிருப்பு அதிகமாக இருப்பதாலும், உர வகைகள் இறக்குமதி, நடப்பு நிதியாண்டில் குறையும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.கையிருப்பு:டை - அமோனியம் பாஸ்பேட் (டீ.ஏ.பி.,) மற்றும் முரேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.) ஆகிய உரங்கள் அதிகளவில் கையிருப்பில் உள்ளன. இவை, வரும் ரபி பருவம் (அக்.,-மார்ச்) வரை போதுமானதாகும்.நம் நாடு, எம்.ஓ.பி., (100 சதவீதம்) மற்றும் டி.ஏ.பி., (90 சதவீதம்) ஆகிய உரங்களை அதிகளவில் இறக்குமதி செய்து கொள்கிறது.
இந்நிலையில், உரங்களின் விலை, மிகவும் அதிகரித்துள்ளதால், விவசாயிகள், ரசாயன உர பயன்பாட்டை குறைத்துள்ளனர். மேற்கண்ட உரங்களுக்கு பதிலாக, குறைந்த விலையில் கிடைக்கும் யூரியா அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதுவும், டீ.ஏ.பி., மற்றும் எம்.ஓ.பி., உர வகைகள் விற்பனையை பாதித்துள்ளது என, இந்திய உர கூட்டமைப்பின் தலைவர் ஏ.வெள்ளையன் தெரிவித்தார்.நடப்பு நிதியாண்டில், எம்.ஓ.பி., இறக்குமதி, 25-30 லட்சம் டன்னாகவும், டீ.ஏ.பி., உர இறக்குமதி, 50 லட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.
அதேசமயம், கடந்த ஆண்டின் இவற்றின் இறக்குமதி முறையே, 26.80 லட்சம் டன் மற்றும் 42.40 லட்சம் டன் என்ற அளவிலும், இது, கடந்த 2010-11ம் நிதியாண்டில், 45 லட்சம் டன் மற்றும் 74 லட்சம் டன் என்ற அளவிலும் இருந்தது.

விற்பனை:நடப்பு 2012-13ம் நிதியாண்டில், ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான காலத்தில், யூரியா விற்பனை, 3 சதவீத அளவிற்கும், டீ.ஏ.பி., 29 சதவீத அளவிற்கும் குறைந்துள்ளது. சென்ற ஆகஸ்ட் வரையிலுமாக, 8.35 லட்சம் டன் டீ.ஏ.பி.,யும், 6.83 லட்சம் டன் என்.பி.கே., உர வகைகளும் கையிருப்பில் உள்ளதாக, உரத் துறையை சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

01st Oct 20012

## ஆலிவ் எண்ணெய் பயன்பாடு:10 ஆயிரம் டன்னாக உயரும்



புதுடில்லி:மருத்துவக் குணம் நிறைந்த, ஆலிவ் எண்ணெய் பயன்பாடு, இந்தியாவில் சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. எனவே, நடப்பாண்டில், உள்நாட்டில் இதன் பயன்பாடு, 10 ஆயிரம் டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த சில ஆண்டுகளாக, ஆலிவ் எண்ணெய் பயன்பாடு, படிப்படியாக உயர்ந்து வருகிறது. கடந்த 2010ம் ஆண்டில், இந்தியாவில் ஆலிவ் எண்ணெய் பயன்பாடு, 4,000 டன்னாக இருந்தது.

இது, சென்ற 2011ம் ஆண்டில், 6,000 டன்னாக உயர்ந்துள்ளது என, இந்திய ஆலிவ் எண்ணெய் சங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.முன்பு, ஆலிவ் எண்ணெய் மசாஜ் உள்ளிட்ட வெளிப்புற பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது, இந்த எண்ணெய், சமையலறையில், உணவுப் பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ஆலிவ் எண்ணெய், இத்தாலி, ஸ்பெயின் நாடுகளில்இருந்துதான், இறக்குமதி செய்யப்படுகிறது.

சர்வதேச அளவில், ஆலிவ் எண்ணெய் உற்பத்தி, 32 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது. இதில், மேற்கண்ட இரு நாடுகளின் பங்களிப்பு மட்டும், 90 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.கடந்த 2003ம் ஆண்டில், இந்தியாவில், ஆலிவ் எண்ணெய் பயன்பாடு மிகவும் குறைந்து காணப்பட்டது. அதேசமயம், சீனாவில், இதன் பயன்பாடு, 30 ஆயிரம் டன் என்ற அளவில் உள்ளது. சர்வதேச அளவில், மற்ற சமையல் எண்ணெய்களுடன் ஒப்பிடும் போது, இதன் பயன்பாடு குறைவாக

உள்ளது. என்றாலும், தற்போது, மக்களின் செலவிடும் வருவாய் உயர்ந்து வருவதால், ஆலிவ் எண்ணெய் பயன்பாடும் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

01st Oct 20012

## ஆலிவ் எண்ணெய் பயன்பாடு:10 ஆயிரம் டன்னாக உயரும்



கம்பம்:ஏலக்காய் ஏலத்தில், ஒவ்வொரு முறையும் கிலோவிற்கு 50 காசு உயர்த்தி கேட்பதை தவிர்த்து, ஐந்து ரூபாயாக உயர்த்தி கேட்க வேண்டும் என, நறுமணப் பொருட்கள் வாரியம் உத்தரவு பிறப்பித்து உள்ளது.இதனால், ஏலக்காய் வர்த்தகம் நிலைகுலைந்து உள்ளது. ஏலத்தை வியாபாரிகள் தொடர்ந்து புறக்கணிப்பதால், இதுவரை 2.50 லட்சம் கிலோ ஏலக்காய் தேங்கியுள்ளது.கம்பமெட்டு அருகில் உள்ள கேரள மாநிலம் புத்தடியில் ஏலக்காய் ஏலம் நடந்து வருகிறது. செப்., 26 முதல், ஏலத்தில் கலந்து கொண்டு கொள்முதல் செய்யும் வியாபாரிகள், ஏலம் கேட்கும் போது ஒவ்வொரு முறையும், 50 காசு என்று உயர்த்தி கேட்பதை விட்டு, 5 ரூபாயாக உயர்த்தி கேட்க வேண்டும் என, நறுமணப் பொருட்கள் வாரியம் உத்தரவிட்டது.
இந்த உத்தரவை ஏற்க மறுத்த வியாபாரிகள், வர்த்தகத்தை புறக்கணிப்பதாக கூறி, உடனடியாக ஏல மையத்தில் இருந்து வெளியேறினர். அன்று முதல் நான்கு நாட்களாக தொடர்ந்து ஏலத்தை புறக்கணித்ததால், 2.50 லட்சம் கிலோ ஏலக்காய் விற்பனையாகாமல் தேங்கியுள்ளது.உத்தரவு பிறப்பித்த நறுமணப் பொருட்கள் வாரிய தலைவர் ராஜ்திலக், வெளிநாடு சென்று விட்டார். அவரது அனுமதி இன்றி வேறு யாரும் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. இதனால் இப்பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டுஉள்ளது.இந்நிலையில், வியாபாரிகள் தொடர்ந்து ஏலத்தை புறக்கணித்து வருகின்றனர். இதனால், நாள் ஒன்றுக்கு சராசரியாக மார்க்கெட்டிற்கு வரும் 60 ஆயிரம் கிலோ ஏலக்காய் தேங்கி கிடக்கிறது. இது, விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.

01st Oct 20012

## விவசாய பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை :உழவர் குழு அமைக்க அரசு நடவடிக்கை



ஓசூர்:ஓசூர் பகுதியில், மின் தடையால், குளிர்பதன கிடங்குகளில் ரோஜா மலர்களை சேமித்து வைக்க முடியாததால், மலர் ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதியை, தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.பசுமை குடோன்:கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தாலுகாவில் நிலவும் நல்ல மண் வளம், சீதோஷ்ண நிலையை பயன்படுத்தி, விவசாயிகள் அதிகளவு ரோஜா சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். 5,000 ஏக்கரில், விவசாயிகள், ரோஜாவை திறந்த வெளி மற்றும் பசுமை குடோன்களில் சாகுபடி செய்துள்ளனர்.

திறந்த வெளியில் உற்பத்தி செய்யும் மலர்களை, உள்ளூர் சந்தைகளுக்கும், பசுமை குடோன்களில் உற்பத்தியாகும் ரோஜா மலர்களை, வெளிநாடுகளுக்கும், விவசாயிகள் ஏற்றுமதி செய்கின்றனர்.ஓசூர் பகுதியில் உற்பத்தியாகும் தாஜ்மகால், கிராண்ட் கலா, பஸ்ட் ரெட், ஒயிட், ரெட், எல்லோ உள்ளிட்ட, 40 வகை ரோஜா மலர்கள், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, துபாய் மற்றும் அரேபியா நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது.புத்தாண்டு:குறிப்பாக, காதலர் தினம், அன்னையர் தினம், கிறிஸ்துமஸ், புத்தாண்டு தினங்களில், 50 லட்சம் முதல், ஒரு கோடி வரையிலான மலர்களை, விவசாயிகள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

இந்நிலையில், ஓசூர் பகுதியில், இரண்டு ஆண்டுகளாக பருவ மழை மிகவும் குறைந்துள்ளது.இதனால், நிலத்தடி நீர் மட்டம் வறண்டு, ரோஜா செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டது. ரோஜா செடிகளுக்கு உயர் தொழில்நுட்ப சொட்டுநீர் பாசனம் மூலம் தண்ணீர் பாசனம் செய்யப்படுகிறது. இதற்கு, மின்சாரம் முக்கிய அத்தியாவசிய தேவையாகிறது. தற்போது, தண்ணீர் தட்டுப்பாடு மற்றும் தொடர் மின்தடையால், விவசாயிகள், ரோஜா செடிகளுக்கு சரியான தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை.ஒரு வாரமாக, ஓசூர் தாலுகாவில், தினசரி, 14 மணி நேரம் மின்சாரம் நிறுத்தப்படுகிறது. இதனால், குழாய் கிணறுகளில் உள்ள குறைந்தளவு தண்ணீரை கூட, செடிகளுக்கு பாய்ச்ச முடியவில்லை.

செடிகளில் அறுவடை செய்த ஏற்றுமதி ரக மலர்கள் குளிர்பதன கிடங்குகளில் பாதுகாத்து வைக்கப்படுகின்றன. இவற்றை, வாரம் ஒரு முறை, விவசாயிகள் டில்லி, மும்பை, பெங்களூரு, கோல்கட்டா, சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட உள்நாட்டு மலர் சந்தைகளுக்கும், வெளிநாட்டு மலர் சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர்.

குளிர்பதன கிடங்கு:தொடர் மின் தடையால், விவசாயிகள், ரோஜா மலர்களை பறித்து, குளிர்பதன கிடங்குகளில் சேமித்து வைக்க முடியவில்லை. தற்போது, விவசாயிகள், தினசரி பறிக்கும் மலர்களை உள்நாட்டு சந்தைகளுக்கு மட்டுமே விற்பனைக்கு அனுப்புகின்றனர். தரமற்ற மலர் மற்றும் விலை வீழ்ச்சியால், விவசாயிகள் மலர் ஏற்றுமதியை தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர்.தரமற்ற மலர் உற்பத்தியால், 150 ரூபாய்க்கு விற்பனையான, 20 பூக்கள் கொண்ட ஒரு கொத்து, தற்போது, 50 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**01st Oct 20012**

## விவசாய பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை :உழவர் குழு அமைக்க அரசு நடவடிக்கை

திருவண்ணாமலை: விவசாய பணிக்கு ஆட்கள் பற்றாக்குறையை போக்க, உழவர் குழு அமைக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் விவசாய பணிகள் செய்ய கூலி ஆட்கள் பற்றாக்குறையை வேளாண் இயந்திரங்கள், கருவிகளை கொண்டு நிவர்த்தி செய்யும் பொருட்டு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், 15 நபர்கள் கொண்ட உழவர் குழுவினை திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைத்திட, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த குழுவிற்கு தமிழக அரசின் சார்பில் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக, 4 பவர் டில்லர், 4 வீடர் மற்றும், 4 நெல் மாற்று நடவு இயந்திரங்கள் முழு மானியத்துடன் வழங்கப்பட உள்ளது. இந்த கருவி மற்றும் இயந்திரங்களை இயக்கவும், பராமரிக்கவும், பத்து நாட்கள் பயிற்சி அளிக்கப்பட உள்ளது, பயிற்சியின்போது பயிற்சியாளர்களுக்கு தினப்படியாக, 70 ரூபாய் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். மேலும் இந்த குழுவிற்கு, 6 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பராமரிப்பு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளன. இந்த குழுவில் சமூக அக்கறையுள்ள, ஆர்வமுள்ள இளைஞர்கள், சிறு குறு விவசாயிகள் பணியாற்றிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த குழு சங்கமாக பதிவு செய்து செயல்படுத்தப்பட உள்ளது. உழவர் குழுவில் சேர குழுவின் அனைத்து ஆவணங்களையும் பராமரிக்கும் அளவிற்கு குறைந்த பட்ச கல்வித்தகுதி பெற்றிருந்தால் போதுமானது. குழுவின் அங்கத்தினர்கள் வேளாண் இயந்திரங்கள், கருவிகளை வயல் வெளிகளில் இயக்குவதற்கு போதுமான அளவு உடல் திறன் பெற்றிருத்தல் வேண்டும். குழுவின் பொறுப்பில் வழங்கப்படும் இயந்திரங்கள், கருவிகளை விவசாயிகளுக்கு வாடகைக்கு விட்டு அதன் மூலம் பெறப்படும் வருவாயில் இயந்திரங்களை பராமரிக்கும் பொறுப்பு குழுவை சார்ந்ததாகும். இந்த குழு மாவட்ட

அளவில் அனைத்து தாலுகாக்களிலும் தேவைக்கேற்ப பணியாற்ற தயார் படுத்தி கொள்ள வேண்டும். இந்த விதிமுறைப்படி குழு அமைத்து பணியாற்றிட தனி நபர்களிடமிருந்தோ, குழுக்களிடமிருந்தோ விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பத்துடன் கல்வி சான்றிதழ், வயது சான்று, சிறு குறு விவசாயிகளுக்கான சான்று, இருப்பிட சான்று, புகைப்படம் ஆகியவற்றை இணைத்து செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, கலெக்டர் அலுவலக வளாகம், வேங்கிக்கால், திருவண்ணாமலை என்ற முகவரிக்கு வரும், 15ம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டு குழு தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த திட்டம் திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகளுக்கு உதவிகரமாக அமைய உள்ளது.

01st Oct 20012

## திசு வாழைக்கன்று வளர்ச்சி தோட்டக்கலை அதிகாரி ஆய்வு

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை அருகே செங்குறிச்சியில் திசு வாழைக் கன்று வளர்ச்சி குறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் ராசு ஆய்வு செய்தார்.

திருநாவலூர் ஒன்றியத்தில் தேசிய தோட்டக் கலை திட்டம் மூலம் விவசாயிகளுக்கு திசு வாழை கன்றுகள் வழங்கப்பட்டன. அக்கன்றுகளை செங்குறிச்சி ஏழுமலை, நடேசன், வெங்கடேசன் ஆகிய விவசாயிகள் வளர்த்து வருகின்றனர்.இந்த வாழைக் கன்று வளர்ச்சியினை தோட்டக்கலை துறை துணை இயக்குநர் ராசு நேரில் ஆய்வு செய்தார். மாவட்ட நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் விக்ரமன்,உதவி வேளாண் அலுவலர் ஜோதிராமலிங்கம் உடனிருந்தனர்.

01st Oct 20012

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.50 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 1,500 மூட்டை மஞ்சள், 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், நேற்று முன்தினம், மஞ்சள் ஏலம் நடந்தது. ஏலத்துக்கு, திருவண்ணாமலை, நைனார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கடலூர், பெரம்பலூர் ஆகிய வெளி மாவட்ட பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாது, ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல் ஆகிய பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளைவித்த மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,000 ரூபாய்க்கும், அதிகபட்சம், 7,009 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 3,500 ரூபாய்க்கும், அதிகபட்சம், 6,400 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், பத்தாயிரம் ரூபாய்க்கும்,

அதிகபட்சம், 13 ஆயிரத்து, 660 ரூபாய்க்கும் விற்பனையானது.
விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 430 ரூபாயும், பனங்காலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,240 ரூபாயும் விலை குறைந்தது. உருண்டை மஞ்சள் குவிண்டாலுக்கு, 160 ரூபாய் விலை உயர்ந்தது. விவசாயிகள் கொண்டு வந்த, 1, 500 மூட்டை மஞ்சள், 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஏலத்தில், கூடுதல் விலைக்கு மஞ்சளை வாங்கிச் செல்ல, வியாபாரிகள் முன்வராததால், மஞ்சள் விலை சரிவை நோக்கிச் சென்றது

| 01st Oct 20012 | பண்ணை கழிவுகளில் தொழு உரம் தயாரிக்க 50 சதம் மானியம் வழங்கல் |
|---|---|

ராசிபுரம்: "விவசாயிகள் பண்ணைக் கழிவுகளை பயன்படுத்தி, செறிவூட்டப்பட்ட தொழு உரம் தாயரிக்கவும், எருக்குழிகள் அமைக்கவும், வேளாண் துறை மூலம், 50 சதம் மானியம் வழங்கப்படுகிறது' என, ராசிபுரம் வேளாண் உதவி இயக்குனர் வரதராஜ் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
ராசிபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், அந்தந்த பண்ணைகளில் ஏற்படும் கழிவுகளை பயன்படுத்தி, செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிப்பதுடன், எருக்குழிகளும் அமைக்கலாம். செறிவூட்டப்பட்ட தொழு உரம், 750 கிலோ தயாரிக்க, 15 அடி நீளம், ஆறு அடி அகலம், இரண்டு அடி ஆழமும் கொண்ட எருக்குழிகள் அமைக்க வேண்டும். இத்திட்டத்தில், 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிலோ யூரியா, இரண்டு கிலோ சூடோமோனஸ் உயர் உரங்கள் இரண்டு பாக்கெட் இடுபொருள்கள் கொண்டு தயாரிக்க வேண்டும். அதற்கு, 50 சதவீதம் மானியத்தில் இருந்து, 736 ரூபாய், குழி வெட்டுதல், தொழு உரம் நிரப்புதல், தண்ணீர் விடுதல், மண்வைத்து பூசுதல் ஆகிவற்றுக்கு கூலியாக, 1,500 ரூபாய் வழங்கப்படுகிறது.
நடப்பு ஆண்டில், ராசிபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில், பத்து விவசாயிகளுக்கு வேளாண் மையத்தின் உதவியுடன், 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. எருக்குழிகள் அமைக்க ஆர்வம் உள்ளவர்கள் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி, முன்னுரிமை பதிவேட்டில் தங்கள் பெயர்களை பதிவு செய்து பயனடையலாம்.
இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

| 01st Oct 20012 | ஆற்றுப்படுகைகளில் மழை எதிரொலி :காவிரியில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு |
|---|---|

ஈரோடு: மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் காவிரி ஆற்றுப்படுகைளில், கடந்த சில நாட்களாக நல்ல மழை பெய்து வருவதால், காவிரியில தண்ணீர் வரத்து அதிகரித்து, நேற்று காலை இருகரை தொட்டு தண்ணீர் சென்றன.

தமிழகத்தில், டெல்டா பாசன விவசாயத்துக்காக, ஆண்டுதோறும் ஜூன், 12ம் தேதி, காவிரியில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். நடப்பாண்டு போதிய மழையில்லாததால், மேட்டூர் அணை, தண்ணீர் இருப்பு, 70 அடிவரையிலும் குறைந்தன.

அணையில் தண்ணீர் குறைந்ததால், நடப்பு பருவ டெல்டா பாசனத்துக்கு, தண்ணீர் திறக்கப்படவில்லை. முதல்வர் ஜெயலலிதா உத்தரவை அடுத்து, குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, நாள்தோறும் ஆயிரம் கனஅடி தண்ணீர் அணையில் திறந்துவிடப்பட்டது.

காவிரி ஆற்றின் குறுக்கே, கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளில், மின் உற்பத்தி செய்வதற்காக, தண்ணீர் தேக்கியதால், காவிரி ஆற்றில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கிக் காணப்பட்டது.

கடந்த சில நாட்களாக, கர்நாடகா, காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில், நல்ல மழை பெய்கிறது. இதனால், மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. தவிர, தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு படி, காவிரியில் தண்ணீரை திறக்கும்படி. உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்று முன்தினம் இரவு, மேற்கு தொடர்ச்சி மலை பகுதி மற்றும் காவிரி ஆற்றுப்படுகை பகுதிகளில், நல்ல மழை பெய்ததால், நேற்று காலை, காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகமாக காணப்பட்டது.

பவானி ஆற்றிலும் மழையால், தண்ணீர் வரத்து அதிகமானது. இதனால், கூடுதுறை பவானி பாலம் துவங்கி, வைராபாளையம் வரையிலும், ஆற்றில் தண்ணீர் இன்றி, பாறைகளாக காணப்பட்ட பகுதிகள், நேற்று, தண்ணீரில் முழ்கியதுடன், ஆற்றின் இரண்டுபுற கரைகளையும் தொட்டபடி தண்ணீர் சென்றது.

காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால், வெண்டிபாளையம் தடுப்பணையில், முழுமையான மின் உற்பத்திக்கு தேவையான தண்ணீர் ஓரிரு நாட்களில், எட்டிவிடக்கூடும். கரையோர பகுதிகளில் எஞ்சிய வீடுகளில் வசிப்பவர்களையும் அப்புறப்படுத்த, பொதுப்பணித்துறை மற்றும் மின்துறையின் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

| 01st Oct 20012 | பெருந்துறை கொப்பரை தேங்காய் சந்தை ஒரே வாரத்தில் 70 ஆயிரம் கிலோ வரத்து சரிவு |
|---|---|

ஈரோடு: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில், கடந்த வாரத்தை விட, 70 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் வரத்து குறைந்ததால் வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் நேற்று முன்தினம் கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. கோவை, சேலம், ஈரோடு, காங்கேயம் உள்ளிட்ட பகுதியில் இருந்து ஆயில் மில் உரிமையாளர்கள் மற்றும் டீலர்கள் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்ய குவிந்தனர்.
ஈரோடு, சேலம் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதியில் இருந்து, விவசாயிகள், 1,800 மூட்டைகளில், 90 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதற்கு முந்தைய வாரம், 1.60 லட்சம் கிலோ கொப்பரை தேங்காய் விற்பனைக்கு வந்தது. கடந்த வாரம் திடீரென, 70 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் குறைந்ததால், வியாபாரிகளிடையே போட்டி நிலவியது. சங்கத்தில், முதல் தரம் கொப்பரை தேங்காய் கிலோ, 36.50 ரூபாய் முதல், 38.55 ரூபாய் வரை ஏலம் போனது. இரண்டாம் தரம் கிலோ, 36.36 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மொத்தம், 34 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை தேங்காய் விற்கப்பட்டது.
அதேபோல், பெருந்துறை வாரச் சந்தையில் தேங்காய் விற்பனை நடந்தது. முதல் தரம், 5 ரூபாய் முதல், 6 ரூபாய்க்கும், இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய், 4 ரூபாய் முதல், 5 ரூபாய்க்கும், மூன்றாம் தரம், 3 ரூபாய் முதல் 4 ரூபாய்க்கும் என மொத்தம், 7 லட்சத்து, 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது.
கடந்த ஒரு மாதமாக தேங்காய் விலையில் எந்த மாற்றம் இல்லாததால், வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். சிலர் விற்பனைக்கு கொண்டு வந்த தேங்காயை, திருப்பி எடுத்து சென்றனர்.

| 01st Oct 20012 | நெல் கொள்முதல் நிலையங்களில் விலை உயர்த்துங்கள் :அரசுக்கு விவசாய சங்கங்கள் யோசனை |
|---|---|

கோபிசெட்டிபாளையம்: "தனியாரை விட அரசு அறிவித்துள்ள நெல் கொள்முதல் விலை குறைவாக உள்ளதாகவும், மோட்டா ரகத்துக்கு, 15 ரூபாய், சன்ன ரகத்துக்கு, 17 ரூபாய் வழங்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
விவசாய முக்கியத்துவம் வாய்ந்த ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர் அணை மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதிகள், எல்.பி.பி., வாய்க்கால் மூலம் பயன்பெறும் பாசன பகுதிகள் என, 2.5 லட்சம் ஏக்கரில் விவசாயம் நடக்கிறது. ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் ஆண்டுக்கு இருபோகம் நெல் சாகுபடி நடக்கிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் முதல் போக நெல் சாகுபடி முடிந்து, அறுவடை செய்யப்படும் நெல், அரசு நெல் கொள்முதல் நிலையம்,

தனியாரிடமும் விற்பனை செய்கின்றனர்.
கடந்தாண்டு வரை மோட்டா ரகத்துக்கு, 11 ரூபாய், சன்னரகத்துக்கு, 11.50 ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது மோட்டா ரகத்துக்கு, 13 ரூபாய், சன்னரகத்துக்கு, 13.50 ரூபாய் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதாவது, சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு, 1,300 ரூபாய், சன்ன ரகம், 1,350 ரூபாய் வழங்கப்படும்.
கூலி ஆட்கள் பற்றாகுறை, உர விலை உயர்வால் இவ்விலை விவசாயிகளுக்கு கட்டுபடியாகவில்லை.
தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க தலைவர் தளபதி கூறியதாவது: நீர் பற்றாகுறையிலும் இப்பபாசனத்தில் முதல் போகத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. உரம் விலை, 100 சதவீதம், கூலி உயர்வு பல மடங்கு உயர்ந்துள்ளது. கடந்த, 2009-10ம் ஆண்டுக்கு பின் மோட்டா ரகத்துக்கு, 13 ரூபாய், சன்ன ரத்துக்கு, 13.50 ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஆறுதலாக கருதப்படுகிறது. ஆனாலும், வெளி வியாபாரிகள் ஒரு பொதி, 3,800 முதல், 4,000 ரூபாய்க்கு வாங்கி செல்கின்றனர். நெல் கொள்முதல் நிலையங்களை தவிர, துவக்க வேளாண்மை கூட்டுறவு நிலையங்களிலும் நெல் கொள்முதல் செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளதை விவசாயிகள் வரவேற்கிறோம். நெல் அறுவடை முடிந்த நிலையில், இந்த அறிவிப்பு விவசாயிகளுக்கு பயனற்றதாக உள்ளது.
தஞ்சாவூர் விவசாயிகளை மனதில் கொண்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட விவசாயிகள் இந்த விலை கிடைக்காது. அடுத்த ஆண்டுதான் கிடைக்கும். தேசிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனையகம் குழு, விலை தீர்மானிக்கும் நேரத்தில் விலை அறிவிக்க வேண்டும். அல்லது ஆண்டின் துவக்கம், வருவாய் ஆண்டின் துவக்கத்தில் அறிவிப்பு வெளியிட்டால் விவசாயிகள் பயன்பெறுவர்.
இவ்வாறு அவர் கூறினார்.
உழவர் விவாத குழு செயலாளர் வெங்கடாசலபதி கூறுகையில், ""தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில், 80 சதவீத நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. கூகலூர் பாசனத்தில் மட்டுமே அறுவடை நடக்கிறது. வெளி வியாபாரிகளைவிட, அரசு குறைத்து விலை அறிவித்துள்ளதால், மோட்டா ரகத்துக்கு, 15 ரூபாய், சன்ன ரகத்துக்கு, 17 ரூபாய் என அரசு வழங்க வேண்டும்,'' என்றனர்.

| 01st Oct 20012 | மானிய விலையில் விதை விவசாய அதிகாரி தகவல் |
|---|---|

கரூர்: "விவசாயிகளுக்கு காய்கறி விதை, 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது' என, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் வீரமலை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: கடவூர் தோட்டக்கலைத்துறை சார்பில் காய்கறி விதைகள், பழ மர செடிகள், 50 சதவீத

மானிய விலையில் விவசாயி களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் கீழ், ஒவ்வொரு ஆண்டும் வீரிய விதைகள், ஒட்டுமொத்த பழக்கன்றுகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. அதன்படி, நடப்பாண்டில் கடலூர் வட்டார விவசாயி களுக்கு மிளகாய், வெண்டை, முருங்கை, தக்காளி போன்ற விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், பழ மர சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் மா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, பலா, நெல்லி போன்ற பழ மர செடிகளும், 50 சதவீத மானிய விலையில், நல்ல தரமான ஒட்டு கன்றுகள் விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, விதைகள், பழமர கன்றுகள் பெற, தரகம்பட்டி தோட்டக்கலை அலுவலர்களை, விவசாயிகள் அணுகலாம்.

**01st Oct 20012** | தரமான நாற்றுகளை வாங்க விவசாயிகளுக்கு அழைப்பு

ஊட்டி:தோட்டக்கலை இணை இயக்குனர் பிரகாசம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:நீலகிரி மாவட்டத்தில், அரசு தோட்டக்கலை துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் தரமான செடிகள் இருப்பில் உள்ளது. கல்லாறு, பர்லியார் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் பாக்கு, மொகித்நகர் ரகம், காபி, காவேரி ரகம், மிளகு, எலுமிச்சை நாற்றுக்கள் விற்பனைக்கு தயாராக உள்ளன. காட்டேரி, நஞ்சநாடு, கோல்கிரைன், தேவாலா, தொட்டபெட்டா மற்றும் தும்மனட்டி ஆகிய பண்ணைகளில் தேயிலை நாற்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளது. அரசு தாவரவியல் பூங்கா, ரோஜாபூங்கா, சிம்ஸ் பூங்கா பண்ணைகளில் ரோஜா மற்றும் அலங்கார செடிகள் மற்றும் பழவியல் பூங்காவில், டீ, சில்வர் ஓக் மற்றும் மேண்டரின் ஆரஞ்சு, பாசன் பழக்கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட பண்ணை மேலாளரை அணுகி நாற்றுக்களை பெற்று பயனடையலாம். இவ்வாறு பிரகாசம் கூறியுள்ளார்.

**01st Oct 20012** | காய்கள் வரத்து குறைவு;பொலிவிழந்த சந்தை

ஒட்டன்சத்திரம்:மழையின்றி காய்கள் வரத்து குறைந்து விட்டதால் ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தை பொலிவிழந்து காணப்படுகிறது.தமிழகத்தில் உள்ள காய்கறி சந்தைகளில் ஒட்டன்சத்திரம் சந்தை முக்கிய இடத்தை பிடித்துள்ளது. பல்வேறு காய்களின் அன்றாட விலை நிலவரங்கள் பெரும்பாலும், இதனை ஒட்டியே அமைகிறது. வரத்து: தாராபுரம், ஆண்டிபட்டி பகுதிகளில் இருந்து முருங்கைக்காய், புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து பூசணிக்காய், சேலம், நத்தம் பகுதியில் இருந்து மாங்காய், உள்ளூர் வடகாடு மலை பகுதியில் இருந்து பீன்ஸ், காளாஞ்சிபட்டி, கொல்லபட்டி, அம்பிளிக்கை உள்ளிட்ட கிராமங்களில் இருந்து தக்காளி, வெங்காயம், பெல்லாரி முதலியனவும், ஆந்திரா மாநிலத்தில் இருந்து மிளகாய் காய்கறி சந்தைக்கு கொண்டு

வரப்படுகிறது.வியாபாரிகள்: இங்கு கொண்டு வரப்படும் காய்களில் 70 சதவீதத்திற்கும் மேல் கேரள வியாபாரிகளால் வாங்கப்பட்டு, தினமும் 50க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் கண்ணனூர், கொச்சி, கோழிக்கோடு, திருவனந்தபுரம், குருவாயூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்லப் படுகிறது. கேரளாவில் ஸ்டிரைக் நடக்கும் நாளுக்கு முதல் நாள் இங்கு வியாபாரம் படு மந்தமாக காணப்படும்.பொய்த்த பருவமழை: இப்பகுதியில் உழவு செய்யும் அளவிற்கு கூட இதுவரை மழை பெய்யவில்லைஇதனால் நிலங்கள் உழவு செய்யப்படாமல் உள்ளது. வேளாண்பணிகள் முற்றிலும் முடங்கியது. முன்னர் பயரிடப்பட்ட காய்கறிகள் மழை இல்லாததால் அதன் முழு மகசூலை எட்ட முடியாமல் போய்விட்டது.

காலை 7 மணிக்கு வெங்காயம் ஏலத்தில் தொடங்கி நள்ளிரவுக்கு மேல் மிகவும் சுறுசுறுப்பாக சந்தை செயல்படும். ஞாயிறன்று அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் காய்களை ஏற்றிக் கொண்டு வருவதால்பஸ்ஸ்டாண்ட் முன் போக்குவரத்து நெரிசல் இருப்பது வழக்கமான ஒன்று. அந்த நாட்களில் திண்டுக்கல் மெயின் ரோட்டிலேயே காய்கள் இறக்கப்பட்டு எடை போடப்படும். போதிய மழை இல்லாததால் கடந்தசில வாரங்களாக வரத்து மிகவும் குறைந்ததால் சந்தை சுறுசுறுப்பின்றி காணப்படுகிறது.

**01st Oct 20012** | **ஓட்டபிடாரம் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி**


கோவில்பட்டி: ஓட்டப்பிடாரம் விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் தஞ்சாவூரில் தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் அட்மா வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் மாநில அளவிலான விவசாயிகள் தொழில் நுட்ப பயிற்சி நடந்தது. தஞ்சாவூர் பிஎம்டி வேளாண் அறிவியல் மையம் மற்றும் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் பயிர்கள் பதப்படுத்தும் நிலையத்தில் நடந்த பயிற்சியில் கோவில்பட்டி கோட்டம் ஓட்டப்பிடாரம் வட்டார விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இதில் விளைபொருள் விற்பனை செய்வதிலுள்ள நடைமுறை சிக்கல், சரிசெய்யும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் விளைபொருள் அறுவடைக்கு பின்செய் நேர்த்தி தொழில் நுட்ப செய்திகள், வேளாண் விளை பொருள்களை மதிப்பு கூட்டி அதனை சந்ததைப்படுத்தல், கால்நடை பராமரிப்பு, தீவணம் கொடுக்கம் முறைகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. தவிர அறிவியல் மைய பண்ணைகளை பார்வையிட்டனர். இரண்டாம் நாள் பயிற்சியில் பயிர்கள் பதப்படும் இயந்திரங்கள், பயறு வகைகளை உடைக்கும் இயந்திரங்கள், சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் குறித்து செயல் விளக்கம் காட்டினர். பயிற்சிகளை பிஎம்டி வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார், தொழில் நுட்ப வல்லுநர்கள் மணிமாறன், சுமதி, கால்நடை டாக்டர் கவிதா, பேராசிரியர் சீனிவாசன், ஹேமப்பிரியா ஆகியோர் அளித்தனர். பயிற்சியில் வேளாண்மை அலுவலர் பாஸ்கர், நீலகண்டப்பிள்ளை, ஒட்டநத்தம் மற்றும் ஜெகவீரபாண்டியபுரம் பகுதி விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

30.09.2012 P.M

01.10.2012 A.M

| 01th Oct 20012 | நெல் குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும்: ராமதாஸ் |
|---|---|



சென்னை, செப். 30: நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் கொள்முதல் விலையாக வழங்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: சன்ன ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,350-க்கும், சாதாரண ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,300-க்கும் கொள்முதல் செய்யப்படும் என தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. இதே நிலை தொடர்ந்தால் விவசாயிகள் நெல் பயிரிடுவதையே விட்டுவிடும் நிலை ஏற்படும். உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். எனவே, நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரமாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

30th set 2012 P.M

| 30th Sep 20012 | திருந்திய நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம் |
|---|---|

கரூர், செப். 29: திருந்திய நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார் கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயந்தி.
இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:
கடலூர் வட்டாரத்தில் விவசாயிகள் சம்பா நெல் சாகுபடிக்கு நாற்றங்கால் தயாரித்து வருகின்றனர். சம்பா நெல் சாகுபடியில் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையை கடைப்பிடிக்க வேண்டும். இந்த சாகுபடிக்கு, ஒரு ஏக்கருக்கு நாற்றங்கால் அமைக்க ஒரு சென்ட் நிலம் தேவைப்படும். ஒரு சென்ட்டில் மேட்டுப் பாத்திகள் அமைக்க வேண்டும்.
ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டிரைகோ டெர்மாவிரிடி 4 கிராம் பயன்படுத்தி விகித நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். நாற்று விட்ட 15-ம் நாள் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 10-ம் நாள் கோனோவீடர் மூலம் களைகளை அழித்து நிலத்தில் மக்கச் செய்யலாம். தொடர்ந்து 3 முறை கோனோவீடரை பயன்படுத்த வேண்டும்.
நிறைய நீர் பாய்ச்ச வேண்டும். இதனால், நெல் சிம்புகள் அதிகம் வளரும்.
சிம்புகள் அதிகரிக்கும்போது, கதிர்கள் அதிகமாகி நெல் மணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் மகசூலும் அதிகரிக்கும்.

எனவே, கடலூர் பகுதி விவசாயிகள் அந்தப் பகுதியில் உள்ள வேளாண் உதவி அலுவலர்களைச் சந்தித்து திருந்திய நெல் சாகுபடி முறை தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து கூடுதல் மகசூல் பெற்று பயன் பெற வேண்டும் என்றார் அவர்.

| 30th Sep 20012 | பூச்சி மேலாண்மை முறைகளை பயன்படுத்தினால் அதிக லாபம் பெறலாம்' |
|---|---|

பெரம்பலூர், செப். 29: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், பூச்சி மேலாண்மை முறைகளை பயன்படுத்தினால் அதிக லாபம் பெறலாம் என்றார் மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குநர் பி. சங்கரலிங்கம்.
பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், கோயமுத்தூர் இந்திய பருத்திக் கழகத்தின் நிதியுதவியோடு, பெரம்பலூர்

மாவட்ட வேளாண்மைத் துறை, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் இணைந்து, பருத்தியில் முதல் நிலை செயல் விளக்கத் திடல் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.
இந்தத் திட்டத்தை வெள்ளிக்கிழமை தொடக்கிவைத்து அவர் பேசியது:
மிக நீண்ட இழை பருத்தியானது, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரின் முயற்சியோடு மிக அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது.
தகுந்த சாகுபடி தொழில் நுட்பங்களையும், ஒருங்கிணைந்த பயிர் மற்றும் பூச்சி மேலாண்மை முறைகளை பயன்படுத்தும்போது மிக, அதிக நிகர லாபம் பெற முடியும். தற்போது, பெரம்பலூர் மாவட்டத்துக்கு பருத்தி பயிருக்கான இலை வழியாக தெளிக்கும் நுண்ணூட்ட கலவை அனபித்து வட்டார வேளாண் துணை இயக்குநர் அலுவலகத்தில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதை, அனைத்து பருத்தி விவசாயிகளும் பெற்று பயனடைய வேண்டும் என்றார்.
தொடர்ந்து, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மைய உழவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பி. பாஸ்கர் களை மேலாண்மை மற்றும் நீண்ட இழை சாகுபடி முறைகள் குறித்தும், மண்ணியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஷெரின் ஜெனிட்டா ராஜம்மாள், பருத்தியில் உரமிடுதல் மற்றும் நுண்ணூட்ட கலவை தெளித்தல் குறித்தும், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய பருத்தி திட்ட அலுவலர் பி. சரவணன் முதல் நிலை செயல் விளக்கத் திடல் திட்டம், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்தும் பருத்தி விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.
பின்னர், விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ட இடுபொருள்கள், அதை பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்து, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ஜெ. கதிரவன் விளக்கிக் கூறினார்.

விழாவில் இந்திய பருத்திக் கழக உதவி மேலாளர் பி. சிவகுமார், பெரம்பலூர் மாவட்ட வேளாண் அலுவலர் (மத்திய திட்டம்) ராஜேந்திரன், வேப்பந்தட்டை வட்டார வேளாண் அலுவலர் பிரேமா, இந்திய பருத்திக் கழக விற்பனை மேலாளர் கிட்டாமணி, வேளாண் அறிவியல் மைய பருத்தி திட்ட மேற்பார்வையாளர் சக்திவேல் மற்றும் பருத்தி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## 30th Sep 20012 | இணைய வேளாண்மை விழிப்புணர்வுக் கூட்டம்

கடலூர், செப். 29: கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் கெடிலம் உபவடி நிலப் பகுதியில் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் பாலூரில் உள்ள ஒற்றைச் சாளர தகவல் மையத்தில் இணையதள வேளாண்மை விழிப்புணர்வுக் கூட்டம் அண்மையில் நடந்தது.
÷விழிப்புணர்வுக் கூட்டத்தை, கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் ச.நசீர்அகமது தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

÷கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்க இணைப் பேராசிரியரும், இணையதள வேளாண்மைத் திட்டத்தின் முதன்மை ஒருங்கிணைப்பாளருமான சி.கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இணையதள வேளாண்மைத் திட்டத்தின் குறிக்கோள், பயன்பாடு, பயிற்சி குறித்து விவசாயிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் விளக்கிப் பேசி, இணையதள வேளாண்மை திட்ட உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கினார்.

÷நீர்வளத் திட்டத்தின் பொறுப்பு விஞ்ஞானி முனைவர் எஸ்.துரைசாமி, சித்தரசூர் நீர் உபயோகிப்பாளர் சங்கத் தலைவர் மோகன் உள்ளிட்ட 50 பேர் கலந்து கொண்டனர். இளநிலை ஆராய்ச்சி மாணவி சுகன்யா வரவேற்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

01.10.2012 A.M

| 01th Oct 20012 | உச்ச நீதிமன்ற உத்தரவை ஏற்று கர்நாடகா நடவடிக்கை காவிரியில் 3 நாள் தண்ணீர் திறப்பு |
|---|---|



பெங்களூர் : உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து, தமிழகத்துக்கு கர்நாடக அரசு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் காவிரியில் தண்ணீர் திறந்து விட்டுள்ளது. 3 நாட்களுக்கு தண்ணீர் விடப்படும் என்று இம்மாநில முதல்வர் ஷெட்டர் அறிவித்துள்ளார். டெல்லியில் கடந்த 19ம் தேதி நடந்த காவிரி நதிநீர் ஆணைய கூட்டத்தில் பங்கேற்ற முதல்வர் ஜெயலலிதா, 'தமிழகத்துக்கு காவிரியில் தினமும் 2 டிஎம்சி தண்ணீர் திறக்க வேண்டும்' என்று கோரினார். அதை பரிசீலித்த பிரதமர், செப்டம்பர் 20 முதல் அக்டோபர் 15ம் தேதி வரை தமிழகத்துக்கு வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டார்.

இதை கர்நாடக முதல்வர் ஜெகதீஷ் ஷெட் டர் ஏற்க மறுத்தார். இதையடுத்து, சம்பா பயிரை காப்பாற்ற காவிரியில் தண்ணீர் திறந்து விடும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிட கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்தது. இதை கடந்த வெள்ளியன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், பிரதமரின் உத்தரவை மதித்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கும்படி கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டது.

இது பற்றி ஆலோசிப்பதற்காக இம்மாநில முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் நேற்று முன்தினம் கூட்டிய அனைத்து கட்சி கூட்டத்தில், தனது உத்தரவை மறுபரிசீலனை செய்யக்கோரி பிரதமரிடம் முறையிட முடிவு செய்யப்பட்டது. அதன்படி, பிரதமருக்கு அவசர கடிதம் அனுப்பப்பட்டது. பின்னர், ஆளுநர் பரத்வாஜுடன் ஷெட்டர் ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், கிருஷ்ணராஜ சாகர் (கேஆர்எஸ்), கபினி அணைகளில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கேஆர்எஸ் அணையின் 48 மதகுகளில் 12 மதகுகள் திறக்கப்பட்டு தமிழகத்துக்கு தண்ணீர் செல்கிறது. தண்ணீர் திறந்து விட்டதைக் கண்டித்து மைசூர், மண்டியா உள்ளிட்ட காவிரி பாசன மாவட்டங்களில் விவசாயிகளும், பல்வேறு கன்னட அமைப்பினரும் அதிகாலை முதலே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாலையிலேயே சமைத்து சாப்பிட்டு, அங்கேயே படுத்தனர். இதனால், பெங்களூர், மைசூர் இடையே போக்குவரத்து ஸ்தம்பித்தது. பெங்களூரில் இருந்து மைசூர் செல்லும் கர்நாடக அரசு பஸ்களும், பெங்களூரில் இருந்து தமிழகத்துக்கு இயக்கப்படும் அரசு பஸ்களும் ரத்து செய்யப்பட்டன. மாலை 4 மணிக்கு மேல் நிலைமை சற்று மேம்பட்டதால், ஓசூரில் இருந்து கர்நாடகாவுக்கு பலத்த பாதுகாப்புடன் பஸ்கள் இயக்கப்பட்டன.

நேற்று மாலை பத்திரிகையாளர்கள் சந்திப்பை அவசரமாக கூட்டிய முதல்வர் ஷெட்டர், ‘‘தமிழகத்துக்கு 9 ஆயிரம் கனஅடி நீரை திறந்து விடும்படி காவிரி நதிநீர் ஆணைய கூட்டத்தில் பிரதமர் பிறப்பித்த உத்தரவை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. தற்போதைய நிலைமை குறித்து நாரிமன் உள்ளிட்ட மூத்த சட்ட வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறேன். இன்னும் 2 அல்லது 3 நாட்களில் உச்ச நீதிமன்றத்தில் மறுஆய்வு மனு செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. அதுவரை தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பது தவிர்க்க முடியாதது’’ என்றார்.

* சனிக்கிழமை மாலை அனைத்து கட்சி கூட்டம் நடந்தது.
* மறுசீராய்வு மனு தாக்கல் செய்ய முடிவானது.
* தண்ணீர் திறந்து விடும் உத்தரவை ரத்து செய்ய பிரதமருக்கு வேண்டுகோள்.
* அடுத்த சில நிமிடத்தில் பிரதமருக்கு அவசர பேக்ஸ்.
* இரவு 11 மணி வரை பதில் வரவில்லை.
* பின், ஆளுநர் பரத்வாஜை சந்தித்தார் முதல்வர் ஷெட்டர்.

* பேச்சுக்கு பின் நள்ளிரவில் தண்ணீர் திறக்கப்பட்டது.

* 3 நாள் தண்ணீர் திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்றார் ஷெட்டர்.

01th Oct 20012

## பஞ்சாபில் இருந்து 2,670 டன் கோதுமை தஞ்சைக்கு வந்தது



தஞ்சை : பொது விநியோக திட்டத்தின் கீழ் மக்களுக்கு விநியோகம் செய்வதற்காக பஞ்சாபில் இருந்து 2,670 டன் கோதுமை, சரக்கு ரயிலில் தஞ்சைக்கு வந்தது. பொது விநியோக திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக பஞ்சாப் மாநிலத்திலிருந்து 42 வேகனில் 2,670 டன் கோதுமை தஞ்சை ரயில் நிலையத்துக்கு சரக்கு ரயிலில் நேற்று வந்தது. மூட்டைகள் அனைத்தும் லாரிகளில் ஏற்றப்பட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த மூட்டைகள், அந்தந்த ரேஷன் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 01.10.2012 A.M

| 01th Oct 20012 | சு ரீம் கோர்ட்டின் உத்தரவை ஏற்று கர்நாடகம் நடவடிக்கை காவிரியில் தமிழ்நாட்டுக்கு த ணீர் திற பு எதிர் பு தெரிவித்து மைசூர், மா டியா மாவட்டங்களில் போராட்டம் |
|---|---|

சு ரீம் கோர்ட்டின் உத்தரவை ஏற்று, கர்நாடகம் காவிரியில் தமிழ்நாட்டுக்கு த ணீர் திறந்து விட்டு உள்ளது. இதற்கு எதிர் பு தெரிவித்து கர்நாடகத்தில் மைசூர், ம டியா மாவட்டங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பெங்களூர், அக்.1–

காவிரி நதி ர் ஆணைய கூட்டத்தில் பிரதமர் பிற பித்த உத்தரவின்படி, தமிழகத்திற்கு தினசரி வினாடிக்கு 9,000 கனஅடி த ணீர் திறந்துவிடுமாறு கடந்த வெள்ளிக்கிழமை கர்நாடகத்திற்கு சு ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது.

ஆலோசனை

இதுகுறித்து கர்நாடக முதல்–மந்திரி ஜெகதீஷ் ஷெட்டர் நேற்று முன்தினம் பெங்களூரில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி ஆலோசனை நடத்தினார். அந்த கூட்டத்தில் எடுக்க பட்ட முடிவின்படி, பிரதமரின் உத்தரவை நிறுத்தி வைக்குமாறு கோரி காவிரி நதி ர் ஆணையத்திற்கு பேக்ஸ் மூலம் அவசரமாக மனு ஒன்று அனு ப பட்டது.

மேலும் சு ரீம் கோர்ட்டின் உத்தரவு குறித்து சட்ட நிபுணர்களுடனும் ஜெகதீஷ் ஷெட்டர் ஆலோசனை நடத்தினார். அ போது, சு ரீம் கோர்ட்டின் உத்தரவை ஏற்று த ணீர் திறந்து விடுமாறு அவருக்கு யோசனை தெரிவிக்க பட்டது.

காவிரியில் த ணீர் திற பு

இதைத்தொடர்ந்து, காவிரியில் த ணீர் திறந்துவிடுமாறு ஜெகதீஷ் ஷெட்டர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன்படி கிருஷ்ண ராஜசாகர், கபினி அணைகளில் இருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் காவிரியில் தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி த ணீர் திறந்து விட பட்டு இரு பதாக கர்நாடக ர் பாசன துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழ்நாட்டுக்கு வினாடிக்கு 9 ஆயிரம்

கனஅடி  ர் வழங்குவது உறுதி செய்ய படும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஜெகதீஷ் ஷெட்டர் தகவல்

தமிழ்நாட்டுக்கு த  ணீர் திறந்து விட பட்டு இருக்கும் தகவலை முதல்–மந்திரி ஜெகதீஷ் ஷெட்டரும் நேற்று பெங்களூரில் உறுதி செய்தார்.

இது தொடர்பாக நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது–

கர்நாடகத்தில் கடும் வறட்சி நிலவுவதால் விவசாயிகள் கஷ்ட படுகிறார்கள். இருந்தாலும், சு ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு நாம் மதி பு அளிக்க வே  டும். சு ரீம் கோர்ட்டின் உத்தரவுக்கு கட்டு பட்டு குறைந்தபட்சம் 3 நாட்களாவது த  ணீர் திறந்து விட வே  டும் என்றும், அ படி செய்தால் இந்த வழக்கில் கர்நாடகத்தின் நிலையை வலு படுத்த முடி  ம் என்றும் கர்நாடக அரசின் வக்கீல் நாரிமன் யோசனை தெரிவித்தார்.

சு ரீம் கோர்ட்டின் உத்தரவை தவிர்க்க முடியாது

அதன் அடி படையில் தமிழகத்திற்கு த  ணீர் திறந்து விட பட்டு உள்ளது. இன்று காலை (அதாவது நேற்று) காலை 11 மணி நிலவர படி கர்நாடகம் ஏற்கனவே 7,300 கனஅடி த  ணீர் திறந்துவிட்டு உள்ளது. இந்த  ர் அளவு பிலிகு  டுலு  ர் அளவிடும் மையத்தில் பதிவாகி இருக்கிறது.

சு ரீம் கோர்ட்டே உத்தரவிட்டு இரு பதால் தமிழகத்திற்கு த  ணீர் திறந்து விடுவது தவிர்க்க முடியாது. இதை புரிந்து கொ  டு மாநில விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அமைதியை குலைக்க வே  டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மாநில மக்களின் நலனை பாதுகா பதில் கர்நாடக அரசு உறுதியாக இருக்கிறது.

சீராய்வு மனு தாக்கல்

கர்நாடக அரசு சார்பில் சு ரீம் கோர்ட்டில் ஏற்கனவே மறுபரிசீலனை மனு ஒன்று தாக்கல் செய்ய பட்டு உள்ளது. அடுத்த 2 அல்லது 3 நாட்களில் சு ரீம் கோர்ட்டில் மீ  டும் ஒரு சீராய்வு மனுவை தாக்கல் செய்யவும் முடிவு செய்து இருக்கிறோம்.

கர்நாடகத்தில் காவிரி அணைகளில் உள்ள  ர் இரு பு குறித்து ஆய்வு செய்ய நிபுணர் குழு ஒன்றை அனு புமாறு ஏற்கனவே காவிரி நதி ர் ஆணையத்தில் மனு தாக்கல் செய்து உள்ளோம். காவிரி க  காணி பு குழு 8–ந் தேதி கர்நாடகம் வருகிறது. இங்கு உள்ள நிலையை அந்த குழு ஆய்வு செய்  ம்.

இவ்வாறு ஜெகதீஷ் ஷெட்டர் கூறினார்.

பேட்டியின்போது உடன் இருந்த  ர் பாசன துறை மந்திரி பசவராஜ் பொம்மை கூறுகையில், "கர்நாடகத்தின் உ  மை நிலையை ஆராய நிபுணர் குழுவை பிரதமர் அனு பி இருக்க வே  டும். ஆனால் அவர் அதை செய்யவில்லை. நாங்கள் மீ  டும் சு ரீம் கோர்ட்டுக்கு செல்கிறோம். த  ணீர் திறந்து விடுவதால் ஏற்படும் பிரச்சினைகளை சு ரீம் கோர்ட்டில் விளக்குவோம்" என்றார்.

மேட்டூர் அணையின்  ர் மட்டம்

கிருஷ்ண ராஜசாகர், கபினி அணைகளில் இருந்து திறந்து விட பட்ட த   ணீர் தமிழக எல்லையில் உள்ள பிலிகு   டுலுவை வந்து சேர சுமார் 3 நாட்கள் ஆகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று மாலை நிலவர படி மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 3,027 கனஅடி வீதம் த   ணீர் வந்து கொ   டு இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 13,700 கன அடி த   ணீர் வெளியேற்ற படுகிறது. அணையின்  ர் மட்டம் 74.22 அடியாக இருந்தது.

கர்நாடகத்தில் போராட்டம்

இதற்கிடையே, தமிழ்நாட்டுக்கு காவிரியில் த   ணீர் திறந்து விட்டதற்கு எதிர் பு தெரிவித்து கர்நாடகத்தில் காவிரி பாசன மாவட்டங்களான மைசூர், ம   டியா மாவட்டங்களில் விவசாய சங்கங்களை சேர்ந்தவர்களும், கன்னட அமை பினரும் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

ம   டியாவில் பெங்களூர்–மைசூர் சாலையில் போராட்டக்காரர்கள் நேற்று சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் வாகன போக்குவரத்து பாதிக்க பட்டது. சாலையின் இருபுறங்களிலும் வாகனங்கள்    ட நேரம் அணிவகுத்து நின்றன. ம   டியா மாவட்டம் முழுவதும் போலீஸ் பாதுகா பு பல படுத்த பட்டு உள்ளது.

எம்.எல்.ஏ. கைது

கெஜ்ஜலகரே அருகே மறியலில் ஈடுபட்ட மதசார்பற்ற ஜனதாதள எம்.எல்.ஏ. புட்டராஜூ உள்பட 50 பேர் கைது செய்ய பட்டு பின்னர் விடுவிக்க பட்டனர். போராட்டத்தின் காரணமாக ம   டியா மாவட்டத்தில் பல்வேறு இடங்களுக்கு செல்லும் அரசு பஸ்கள் ரத்து செய்ய பட்டு உள்ளன. அந்த மாவட்டத்தில் இன்று (திங்கட்கிழமை) பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்க பட்டு உள்ளது.

கிருஷ்ண ராஜசாகர், கபினி அணைகளுக்கும் போலீஸ் பாதுகா பு அதிகரிக்க பட்டு இருக்கிறது.

| 01th Oct 20012 | விருத்தாசலத்தில் நெல் நடுவதற்கான உழவு பணியில் விவசாயிகள் தீவிரம் |
|---|---|

விருத்தாசலத்தில் விவசாயிகள் நெல் பயிரிடுவதற்காக உழவு பணியினை தீவிர மாக மேற்கொ   டு வரு கின்றனர்.

சீரான மழை

தமிழகத்தில் உள்ள மற்ற மாவட்டங்களை போன்று கடலூர் மாவட்டத்திலும் பருவ மழை சரிவர பெய்யாத ததால் பொது மக்கள் உள்பட பலரும் மிகவும் பாதிக்க பட்டு வருகின்றனர். ஏரிகள், குளங் கள், ஆறுகள் ஆகியவை த   ணீர் இன்றி வற   டதால் விவசாயிகள் நெல் பயிரிட முடியாமல் பரிதவித்து வந்தனர். தொடர்ந்து அவர் கள் தினந்தோறும் வானத் தினை பார்த்து எ போது மழை வரும் எ போது பயிர் செய்யலாம் என ஏங்கியபடியே இருந்தனர். இந்த நிலையில் விருத்தாசலத்தில் கடந்த 3 நாட்களாக மழை சீராக பெய்ததால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். இரு பினும் தற்போது பெய்த மழை விவசாயத்திற்கு போது மானது இல்லை. ஏனினும் அவர்கள் இனி வரும் தினங் களில் மழை தொடர்ந்து பெய்   ம் என்ற மிகுந்த நம்பிக்கையில் அவர்கள் செம்மை நெல்

சாகுபடி செய்ய அதிக முனை  புடன் தொடங்கி  ள்ளனர். இதன் முதல் கட்டமாக விருத் தாசலத்தில் உள்ள விவசாயி கள் தங்களது நிலத்தில்
உழவு பணியினை தீவிரமாக மேற்கொ    டு வருகின்றனர்.